# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## தரம் - 04
## பயிற்சி வினாத்தாள் - 03


- தயாரிப்பு : திரு.இ.கோணேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர்)
- வழிப்படுத்தல் : திரு.அ. இரவீந்திரன் ( உதவிக்கல்விப்பணிப்பாளர்)
(வலயக் கல்வி அலுவலகம் , கிளிநொச்சி தெற்கு)


## வினாத்தாள் - I

3

**1 மணித்தியாலம்**

சுட்டெண் : ..................................

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

---

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | ............................ பெயர் ............................ ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (............................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | ............................ பெயர் ............................ ஒப்பம் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | ............................ பெயர் ............................ ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன் | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |


● **1 , 2** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவிற்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க.


**1.** 



(1)



(2)


(3)

**2.** 



(1)



(2)


(3)


● **3 , 4** ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள விலங்குகளும் உபகரணங்களும் ஒரு குறித்த இயல்புக்கேற்ப இரு கூட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடை யாது?

**3.**


**A**


**B**


**C**


**D**

(1) AD உம் BC உம்   (2) AC உம் BD உம்   (3) AB உம் CD உம்

**4.**


**A**


**B**


**C**


**D**


**E**



**F**


(1) A, C, F உம் B, D, E   (2) A, D, F உம் B, C, E   (3) B, D, F உம் A, C, E

**5.** வயலின் - வாசித்தல் எனின் , கொம்பு ..............................
(1) மீட்டுதல்   (2) தட்டுதல்   (3) ஊதுதல்

**6.** தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

**போக்குவரத்து - சூழல்நேயம் - மிருகவலு**


(1)


(2)


(3)

● பின்வரும் கவிதையை வாசித்து 7, 8 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

**அழுக்கில்லா ஆடையே மேன்மை ! அதை**
**அணிவதாலல்லவோ உடற்குண்டாம் தூய்மை**
**ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி – நில்லாது**
**ஓடி ஓடி பள்ளியை நோக்கி !**

**7.** இக் கவிதையில் கவிஞர் யாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்?

(1) ஆசிரியர்கள் (2) மாணவர்கள் (3) அறிஞர்கள்

**8.** உடலுக்குத் தூய்மையைத் தருவது எது?

(1) நூல்கள் (2) அணிகலன்கள் (3) அழுக்கில்லா ஆடை

**9.** பின்வரும் நிகழ்வுகளை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

**A – பாதையில் பெரிய மரமொன்று முறிந்து விழுந்தது.**

**B – அனைவரும் ஒன்று சேர்ந்து மரத்தை வெட்டி நீக்கினர்.**

**C – கடுங்காற்று வீசியது.**

**D – போக்குவரத்துத் தடைப்பட்டது.**

(1) A D C B (2) C A D B (3) C A B D

**10.**

| பழங்கள் | B | மரக்கறிகள் |
|---|---|---|
| A | பருப்பு | கத்தரிக்காய் |
| மாம்பழம் | கடலை | வெண்டிக்காய் |

இவ் அட்டவணையில் A , B ஆகிய இடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் முறையே,

(1) வாழைப்பழம் , தானியங்கள்


(2) தோடம்பழம் , பயறு


(3) பாகற்காய் , பயறு


**11.** 2024 பெப்ரவரி மாதத்தின் இரண்டாம் திகதி திங்கட்கிழமையாகும். அதன்படி அம்மாதத்தில் உள்ள ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 3


**12.** நான்கு சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

**13.** தாவரங்கள் , மரங்கள் , பனை ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு வகைக் குறிக்கப்பட்டுள்ளது. இங்கு பனையைக் குறிக்கும் எழுத்து எது?





(1) X

(2) Y

(3) Z

● 14 ஆம் 15 ஆம் வினாக்களில் உள்ள எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

14.




(1) 21 (2) 27 (3) 19

15.

| | | | |
|---|---|---|---|
| 12 | 7 | 10 | 11 |
| 5 | 11 | 9 | ...... |

(1) 9 (2) 10 (3) 12


16. மழைக்காலங்களில் டெங்கு நோய் பரவலடையும். இதற்குரிய காரணமாக இருக்கக் கூடியது,

(1) பருகும் நீர் அசுத்தமடைதல்

(2) குளிர்ச்சியாகச் சூழல் காணப்படுதல்

(3) மழை நீர் தேங்கி நிற்றல்

17.





வியாபாரி ஒருவரிடம் இருந்த பழங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வட்ட வரைபு காட்டுகின்றது. வியாபாரியிடம் இருந்த மாம்பழங்களின் எண்ணிக்கை 14 எனின், வியாபாரியிடம் இருந்த பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 28 (2) 56 (3) 42

18. கம்பியொன்று சமனான இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. அதில் ஒரு துண்டு மீண்டும் சமனான சிறிய இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. அவ்வாறு வெட்டப்பட்ட சிறிய ஒரு துண்டின் நீளம் 6m எனின், முதலில் இருந்த கம்பியின் நீளம் யாது?

(1) 24m (2) 12m (3) 48m


19.



உருவிலுள்ள திண்மத்தில் காணப்படும் மேற்பரப்புக்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 6


20.




உருவில் காட்டப்படும் தராசு சமநிலையானது எனின், பப்பாசிப்பழத்தின் நிறை யாது?


(1) 2kg 500g (2) 500g (3) 1kg 500g

**21.** பின்வரும் உருக்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அதே மாதிரித் தெரியக் கூடிய உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

**22.** அகிலன் மேற்கு நோக்கி சிறிது தூரம் சென்று பின் வலது பக்கம் திரும்பி வடக்கு நோக்கிச் சென்று பின் இடது பக்கம் திரும்பி மேற்கு நோக்கிச் சென்று பயணத்தை நிறைவு செய்தான். இதனைச் சரியாகக் காட்டும் வரைபடம் எது?



(1) (2) (3)

- **A = 4 , B = 5 , C = 7 , D = 8 , E = 9** எனக் கொண்டு **23, 24** ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**23. E - B = ...............**

(1) 4 (2) 5 (3) 6


**24. A + B = ...............**

(1) C (2) D (3) E

**25.** மாணவன் ஒருவன் புத்தகமொன்றின் ¼ பங்கை வாசித்தான். அவன் வாசித்துள்ள பக்கங்களின் எண்ணிக்கை 12 ஆகும். அம்மாணவன் இன்னும் வாசிப்பதற்கு உள்ள பக்கங்கள் எத்தனை?

(1) 3 (2) 36 (3) 48

**26.**



இந்த உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 5 (3) 7

**27.** சுமதியின் தற்போதைய வயது 9 வருடங்கள் ஆகும். அவளுடைய தந்தையின் தற்போதைய வயது சுமதியின் வயதின் மூன்று மடங்கு ஆகும். இன்னும் 3 ஆண்டுகளில் சுமதியின் தந்தையின் வயது எத்தனை?

(1) 27 (2) 30 (3) 12

**28.** ஓர் இரட்டை எண் விடையாகக் கிடைக்கும் சந்தர்ப்பம்

(1) ஓர் ஒற்றை எண்ணுடன் ஓர் ஒற்றை எண்ணைக் கூட்டுதல்

(2) அடுத்து வரும் இரண்டு எண்களைக் கூட்டுதல்

(3) ஓர் இரட்டை எண்ணுடன் ஓர் ஒற்றை எண்ணைக் கூட்டுதல்

● கீழே தரப்பட்ட நெய்யரியைப் பயன்படுத்தி **29, 30** ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

**8 K N 8 5 N H 7 3 K 5 8 N 7 H N 8**

**29.** **N** என்ற எழுத்துக்கு அடுத்தாக இலக்கம் **8** எழுதப்பட்டுள்ள தடவைகளின் எண்ணிக்கை

(1) 4 (2) 2 (3) 3


**30.** இங்கு அதிக தடவைகள் இடம்பெற்றவை

(1) இலக்கங்கள்

(2) ஒற்றை எண்கள்

(3) ஆங்கில எழுத்துக்கள்

**31.**



உருவிலுள்ள சிறிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 9

● **32, 33** ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.




**ரூபாய் 27.00**





**ரூபாய் 21.00**



**ரூபாய் 39.00**

**32.** பென்சில் ஒன்றின் விலை யாது?

(1) ரூபாய் 9.00 (2) ரூபாய் 18.00 (3) ரூபாய் 12.00


**33.** அழிறப்பர் ஒன்றினதும் அடிமட்டம் ஒன்றினதும் விலை யாது?

(1) ரூபாய் 24.00 (2) ரூபாய் 21.00 (3) ரூபாய் 9.00


**34.** "நான் நேற்று முன்தினம் பூங்காவிற்குச் சென்றேன்." எனத் தங்கை இன்று கூறினாள். இன்று புதன்கிழமை எனின், தங்கை பூங்காவிற்குச் சென்றது,

(1) திங்கட்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) புதன்கிழமை

**35.** மண்டபமொன்றில் பதிக்கப்பட்டுள்ள மாபிள்களின் ஒழுங்கு பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



அதன்படி 23 ஆவதாகப் பதிக்கப்பட்டுள்ள மாபிள் எது?



(1) (2) (3)


**36.** முரளியிடம் மூன்று வகையான 6 நாணயங்கள் உள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 15.00 எனின், அவனிடம் உள்ள நாணயங்கள்

(1) ரூபாய் 5.00 நாணயங்கள் - 02, ரூபாய் 2.00 நாணயங்கள் - 02, ரூபாய் 1.00 நாணயங்கள் - 01


(2) ரூபாய் 5.00 நாணயங்கள் - 01, ரூபாய் 2.00 நாணயங்கள் - 04, ரூபாய் 1.00 நாணயங்கள் - 02

(3) ரூபாய் 5.00 நாணயங்கள் - 02, ரூபாய் 2.00 நாணயங்கள் - 01, ரூபாய் 1.00 நாணயங்கள் - 03

**37.** சதுர வடிவக் கடதாசி ஒன்றை அம்புக்குறி காட்டும் திசைக்கேற்ப இரண்டு தடவைகள் மடித்து துளையிடப்பட்ட முறையை பின்வரும் உருக்கள் காட்டுகின்றன.



இக் கடதாசித் துண்டை விரித்த போது காணக்கிடைக்கும் உரு எது?



(1) (2) (3)


**38.** பேருந்து நிலையம் ஒன்றில் இருந்து 13 ஆண்களும் 9 பெண்களும் பயணத்தை ஆரம்பித்தனர். அடுத்த தரிப்பிடத்தில் 4 ஆண்கள் இறங்கும் போது 3 பெண்கள் ஏறினார்கள். தற்போது பேருந்தில் உள்ள பயணிகள் எத்தனை பேர்?

(1) 21 (2) 22 (3) 29

**39.** சானியா 4 மாலைகள் செய்யும் நேரத்தில் அபிநயா 7 மாலைகள் செய்வாள் எனின், அபிநயா 21 மாலைகள் செய்யும் நேரத்தில் சானியா எத்தனை மாலைகள் செய்வாள்?

(1) 11 (2) 12 (3) 28

**40.** பின்வரும் உருவை அவதானித்து பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.



(1) வட்டங்களின் எண்ணிக்கையை விட செவ்வகங்களின் எண்ணிக்கை ஒன்று குறைவு.

(2) செவ்வகங்களின் எண்ணிக்கையை விட முக்கோணிகளின் எண்ணிக்கை ஒன்று அதிகம்.

(3) சதுரங்களின் எண்ணிக்கையும் முக்கோணிகளின் எண்ணிக்கையும் சமனாகும்.

* * *

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## தரம் - 04
## பயிற்சி வினாத்தாள் - 03


- தயாரிப்பு : திரு.இ.கோணேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர்)
- வழிப்படுத்தல் : திரு.அ. இரவீந்திரன் ( உதவிக்கல்விப்பணிப்பாளர்)

(வலயக் கல்வி அலுவலகம் , கிளிநொச்சி தெற்கு)


## வினாத்தாள் - II

**3**

**1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்**

சுட்டெண் : ....................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | ............................ பெயர் ............................ ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (.............................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | ............................ பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | ............................ பெயர் ............................ ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன் | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

மரங்கள் மனித குலத்திற்குச் செய்து வரும் நன்மைகள் கணக்கில் அடங்காதவை. இவை அசுத்த வாயுவான கரியமில வாயுவை உட்கொண்டு மனிதர்களுக்குத் தேவையான ஒட்சிசன் வாயுவை வெளியிடுகின்றன. சாலை ஓரங்களில் நிற்கும் மரங்கள் நிழல் கொடுத்துப் பயணத்தை இனிமையாக்குகின்றன. உணவாகும் பல காய்களையும் கனிகளையும் மரங்கள் அள்ளித்தருகின்றன. பறவைகள் கூடு கட்டி வாழ்வதற்கு வாடகை வாங்காமல் இடம் தந்து உதவுகின்றன. மரங்களின் பட்டைகள் , இலைகள் , வேர்கள் எனப் பலவும் மருந்துப் பொருட்களாகவும் பயனாகின்றன. எனவே நாம் ஒவ்வொருவரும் மரக்கன்றுகளை நட்டுப் பேணிப் பாதுகாப்போம்.

- பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) மரங்கள் உட்கொள்ளும் அசுத்த வாயு எது?

..........................................................................................................

(ii) பயணத்தை இனிமையாக்குபவை எவை?

..........................................................................................................

(iii) மருந்துக்காகப் பயன்படும் மரங்களின் பகுதிகளில் ஒன்றை எழுதுக.

..........................................................................................................

(iv) **'வீதி'** என்ற கருத்தைத் தரும் ஒத்த கருத்துச் சொல் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சொல்லை எழுதுக.

..........................................................................................................

(v) மரங்களில் வாடகை வாங்காமல் வாழ்பவை எவை?

..........................................................................................................

(vi) பந்தியில் இடம்பெற்றுள்ள எதிர்கால வினைச் சொல்லை எழுதுக.

..........................................................................................................

2. பின்வரும் வாக்கியத்தின் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.

கெந்தி விழையாட்டு பிள்ளைகளின் உடலுக்குப் புத்துனர்ச்சியை அளிக்கின்றது.

..........................................................................................................

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) சந்தை / வருகின்றனர் / காய்கறிகளை / நோக்கி / விற்பதற்காகச் / வியாபாரிகள்

..........................................................................................................

(ii) குறியீடுகளைப் / வீதியின் / பார்த்தோம் / மருங்கிலும் / வீதிக் / இரு

..........................................................................................................

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் ' √ ' எனவும் பிழையாயின் ' × ' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் மலர்ந்தது. (.........)

(ii) ஒவ்வொரு புத்தகமும் நல்லது. (.........)

(iii) பசுக்கூட்டம் தோட்டத்தில் புல் மேய்ந்தன. (.........)

(iv) நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் சென்றேன். (.........)

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.

| |
|---|
| அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன |

6. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

ஒருவர் செய்த உதவியை மறத்தல் கூடாது.

............................................................................................................................................

7. பின்வரும் இணைமொழிகளில் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

| |
|---|
| ஆற அமர / கண்ணும் கருத்தும் / நகமும் சதையும் / ஓடி ஆடி |

(i) வயலில் பெண்கள் ........................................ வேலை செய்தனர்.

(ii) அவர்கள் ........................................ போல் வாழ்ந்தார்கள்.

8. பின்வரும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

நட்சத்திரம் வானில் மின்னியது.

............................................................................................................................................

9. பின்வரும் தொடர்மொழிக்குரிய ஒரு மொழியை எழுதுக.

மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன். ........................................................................

10.

அழைப்பிதழ்

விபுலானந்தர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின்

**கலைவிழா**

காலம் : 18.02.2023

நேரம் : காலை 9.00 மணி

இடம் : பாடசாலைக் கேட்போர்கூடம்

இவ் இனிய நிகழ்வினைக் கண்டுகளிக்க வருமாறு
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்பாடு - அதிபர், ஆசிரியர், மாணவர் குழாம்

(i) இவ்விழாவின் ஏற்பாட்டாளர்கள் யாவர்?........................................................................

(ii) ‘கண்டுகளித்தல்’ என்பதன் பொருள் யாது? ........................................................................

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(i) Crane : ........................................ (ii) mountain : ........................................

12. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தினுள் ஆங்கிலத்தில் எழுதுக.

(i)



| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(ii)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) the / am / to / canteen / I / going : ....................................................................................

(ii) like / you / ice cream / Do : ....................................................................................

14. 'பொல' என்ற சிங்கள சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

............................................................................................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

கக்குல சோதன்ன : ....................................................................................

16. 'ஏழாயிரத்து நாற்பத்தைந்து' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக : ....................................

17. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு அமைய விரித்து எழுதுக.

5618 = ............... + ............... + ............... + ...............

18. பின்வரும் நான்கு எண்களையும் ஏறுவரிசையில் மீண்டும் எழுதுக.

7895, 7593, 7398, 7539 : ....................................................................................

19. பின்வரும் எண்கோலத்ததில் அடுத்து வரவேண்டிய இரு எண்களையும் எழுதுக.

4 , 9 , 14 , 19 , .......... , ..........

20. **A** , **B** ஆகிய இரண்டு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட செங்கற்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | தொழிற்சாலை | |
|---|---|---|
| | **A** | **B** |
| **திங்கட்கிழமை** | 4735 | 3549 |
| **செவ்வாய்க்கிழமை** | 6952 | 7563 |

(i) இரண்டு தொழிற்சாலைகளிலும் திங்கட்கிழமை உற்பத்தி செய்யப்பட்ட செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?


............................................................................

(ii) திங்கள் , செவ்வாய் ஆகிய நாட்களில் தொழிற்சாலை **A** யில் உற்பத்தி செய்யப்பட்ட செங்கற்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடு யாது?

............................................................................

21. 415 ஐ 4 இனால் வகுக்கும் போது வரும் விடை யாது? : ....................................................

22. பின்வரும் உருவில் ½ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



23. ஒரு தாங்கியில் 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீர் இருந்தது. அதிலிருந்து 2 லீற்றர் 800 மில்லிலீற்றர் நீரைக் குடிப்பதற்காக எடுத்த பின்னர் எஞ்சியிருந்த நீரின் அளவு யாது?

: ...............லீற்றர் ............மில்லிலீற்றர்

**24.** கடிகார முகத்தில் காட்டப்படும் நேரத்தை இலக்கங்களில் எழுதுக.




நேரம் : ..................................................


**25.** ஒரு பாடசாலையில் 47 மாணவர்கள் உள்ளனர். ஒருவருக்கு 5 கொப்பிகள் வீதம் எல்லோருக்கும் கொடுப்பதற்குத் தேவையான கொப்பிகள் எத்தனை?

: ..........................................................

**26.** பை ஒன்றில் 4kg 850g அரிசி இருந்தது. அதற்குள் மேலும் 3kg 700g அரிசி இடப்படுகின்றது. இப்போது பையிலுள்ள அரிசியின் மொத்த நிறை யாது?


: ..............**kg** ............. **g**

**27.** உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.



: .......................................................

**28.** கீழே உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?




: ........................ **cm**

**29.** பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| அரிசி | 2 kg | 250 | 00 | (i) .......... | ............ |
| மா | 500 g | (ii) ............. | ............... | 150 | 00 |
| மொத்தப் பணம் | | | | 650 | 00 |

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**

**30.** **'நான் ஓர் ஒளி விளக்காக உலகிற்கு ஒளியூட்டுவேன்.'** என்பது சூரிய நமஸ்காரச் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறையாகும்?

(1) படிமுறை - 3 (2) படிமுறை - 5 (3) படிமுறை - 2

**31.** தேசியக் கொடியில் சிவப்பு நிறப் பின்னணி குறிப்பது

(1) சிங்கள இன மக்கள்

(2) இனங்களுக்கிடையான ஒற்றுமை

(3) தேசத்தின் மகத்துவம்

**32.** இலங்கை பிரித்தானியர்களால் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

(1) 1815 (2) 1796 (3) 1505

**33.** ஆவணி மாதத்தில் பூப்பூக்கும் தாவரங்கள்

(1) இலுப்பை, கொன்றை (2) வாகை, விளா (3) முருங்கை, வேம்பு

**34.** வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தில் மயிர்கொட்டி என்று அழைக்கப்படும் பருவம் எது?

(1) கூட்டுப்புழு (2) குடம்பி (3) முட்டை

**35.** உபகரணங்களைச் சரியாகக் கையாளுதல் மற்றும் சரியாகப் பராமரிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மை

(1) உபகரணங்கள் விரைவில் தேய்வடையும்

(2) குறைந்த காலத்திற்குப் பயன்படுத்த முடியும்

(3) விரயம் மற்றும் விபத்துக்களைக் குறைக்க முடியும்

**36.** கைக்குட்டை ஒன்றில் பூக்காம்பு ஒன்றைத் தைப்பதற்குப் பொருத்தமான தையல் வகை எது?

(1) சங்கிலித்தையல் (2) நரம்புத்தையல் (3) கம்பளித்தையல்

**37.** கைபிடி கொண்ட கோப்பைகளில் தேநீரைப் பரிமாறும் போது கவனத்தில் கொள்ள வேண்டியது

(1) கோப்பையின் கைபிடி பெறுபவரின் இடது பக்கத்தில் அமையுமாறு பரிமாறுதல்

(2) கோப்பையின் கைபிடி பெறுபவரின் வலது பக்கத்தில் அமையுமாறு பரிமாறுதல்

(3) கோப்பையின் கைபிடி பரிமாறுபவரின் வலது பக்கத்தில் அமையுமாறு பரிமாறுதல்

**38.** 

படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?

(1) கவனமாகக் கையாளவும்

(2) உயரத்தில் வைக்கவும்

(3) நொருங்கக்கூடியது

**39.** புழுநோய் ஏற்படுவதற்கான காரணம் யாது?

(1) எண்ணெய்த் தன்மையான உணவை உண்ணுதல்

(2) அதிக உறைப்பான உணவை உண்ணுதல்

(3) அசுத்தமான உணவை உண்ணுதல்

**40.** பின்வருவனவற்றுள் பானம் தயாரிக்கப்படும் காய்களில் ஒன்று

(1) அம்பரல்லா (2) நன்னாரி (3) சாத்தாவாரி

**41.** பின்வருவனவற்றுள் **பாதுகாப்பற்ற** சந்தர்ப்பம் எது?

(1) பாதையின் வலது புறத்தால் நடந்து செல்லல்

(2) கண்ணாடிப் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்

(3) மின்னல் மின்னும் வேளையில் வீட்டிற்குள் இருத்தல்

**42.** பின்வரும் எப்பாத்திரத்தில் இடப்பட்ட பனிக்கட்டி முதலில் உருகும்?

(1) சாதாரண நீர் கொண்ட பாத்திரம் (2) வெற்றுப் பாத்திரம் (3) சூடான நீர் கொண்ட பாத்திரம்

**43.** 

படத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடு செய்வதன் நோக்கம் யாது?

(1) மழை நீர் நிலத்தில் விழும் போது ஏற்படும் மாற்றங்களை அவதானித்தல்

(2) மண்ணின் பல்வகைத் தன்மையை அவதானித்தல்

(3) தாவர வளர்ச்சிக்கு நீர் அவசியம் என்பதை அவதானித்தல்

44. பேருந்தில் பயணம் செய்யும் போது நடந்து கொள்ள வேண்டிய சரியான முறை

(1) பின்னால் ஏறி முன்னால் இறங்குதல்

(2) முன்னால் ஏறிப் பின்னால் இறங்குதல்


(3) பின்னால் ஏறிப் பின்னால் இறங்குதல்

45. நீராவியைக் குளிரச் செய்யும் போது தோன்றுவது யாது?

(1) பனிக்கட்டி (2) நீர் (3) வாயு

46. பூச்சிகளை விரட்டி பயிர்களைக் காக்கும் பூ

(1) செவ்வரத்தம்பூ (2) அலரிப்பூ (3) செவ்வந்திப்பூ

47. 

படத்தில் காட்டியுள்ளவாறான மின்காந்தம் ஒன்றில் இரும்பு ஆணியின் முனைகளுக்கு அருகே குண்டுசிகளைக் கொண்டு செல்லும் போது நிகழ்வது யாது?

(1) கவரும் (2) தள்ளும் (3) கவராது

48. அனுராதபுரம் அமைந்துள்ள மாகாணம் எது?

(1) மத்திய மாகாணம் (2) வடமத்திய மாகாணம் (3) மேல்மாகாணம்

49. வகுப்பறையினுள் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை தயாரிக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயம் யாது?

(1) பூம்பாத்திகளை நேர்த்தியாக்குதல்

(2) விளையாட்டுத்திடலைச் சுத்தப்படுத்துதல்

(3) தேவையற்றதை அப்புறப்படுத்துதல்

50. நவீன கால தொடர்பாடல் முறையாக **அமையாதது**

(1) முரசறைதல் (2) மின்னஞ்சல் (3) தொலைபேசி

51. பிரதேச செயலகத்தினால் ஆற்றப்படும் சேவைகளில் ஒன்று

(1) புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்குதல்

(2) நன்னடத்தைச் சான்றிதழ் வழங்குதல்

(3) பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்குதல்


52. சூரிய நமஸ்காரச் செயற்பாடுகளைத் தினமும் செய்வதால் கிடைக்கும் **பயன்**

(1) உடற் பருமன் அதிகரிக்கும்

(2) உடல் உளத் தகைமை ஏற்படும்

(3) மன அமைதியின்மை ஏற்படும்

53. **' சிலோன் நஷனல் ரிவீவ் '** எனும் சஞ்சிகையின் ஆரம்பகால பிரதம ஆசிரியர் யார்?

(1)  (2)  (3) 

54. பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மை எது?

(1) வாழிடம் கிடைத்தல் (2) உணவு கிடைத்தல் (3) வித்துக்களைப் பரப்ப உதவுதல்

55. பின்வருவனவற்றுள் பிராணிகளின் இருப்புக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய மனித செயற்பாடு எது?

(1) நிலத்தில் வெந்நீர் கொட்டுதல்

(2) சேதனப் பசளையிடுதல்

(3) மரங்களை நடுதல்

56. ஒப்பநாயக்க பெருங்கொடித் தாவரம் அமைந்துள்ள மாவட்டம் எது?

(1) அம்பாந்தோட்டை (2) மொனறாகலை (3) இரத்தினபுரி

57. உடலுக்குச் சக்தியைத் தரும் உணவுக் கூட்டம்

(1) ஈரப்பலா, அவரை, மீன்

(2) உருளைக்கிழங்கு, ஈரப்பலா, சோறு

(3) சோறு, நிலக்கடலை, பருப்பு

58. பொதியிடப்பட்ட பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது முதலில் கவனம் செலுத்த வேண்டியது

(1) உள்ளீடு

(2) தயாரித்த நிறுவனம்

(3) காலாவதியாகும் திகதி

59. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும் போது நிகழ்வன முறையே,

(1) நீர் சூடாகும், நீர் ஆவியாகும்

(2) நீர் ஆவியாகும், ஒலி எழும்

(3) ஒலி எழும், நீர் ஆவியாகும்

60. இன்றைய காலத்தில் வீட்டுத்தோட்டம் மிகவும் இன்றியமையாதது. வீட்டுத் தோட்டத்தில் பல்வேறு வகையான தாவரங்களை நாட்டிப் பராமரிக்கின்றனர். **"வீட்டுத்தோட்டத்தின் பயன்கள்"** எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக்கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..........................................................................................................................

..........................................................................................................................

2. ..........................................................................................................................

..........................................................................................................................

3. ..........................................................................................................................

..........................................................................................................................

* * *